**திரு. என். கிட்டப்பா :** மேற்கண்ட பகுதியில் குடிநீர் வசதி செய்து கொடுக்க ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக ஆய்வு நடைபெற்று, அந்தப் பேரூராட்சிக்கு ரீ-பேயிங் கபாசிடி இல்லை என்று மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எனவே, அரசு நீண்ட காலமாக இருந்துவருகிற இந்தக் குறையினை தனித் தன்மையுடன் அணுக ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இதே விதமான தனித்தன்மையுள்ள இடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கைந்து இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அவைகளுக்கெல்லாம் நிதியை எப்படிப் பெறுவது என்பது—அரசு மானியமாகத் தருவதாக இருந்தாலும், அரசுக்கு அந்த நிதி எந்த இடத்திலிருந்து கிடைக்கச் செய்வது என்பது பெரிய பிரச்னையாகும். ஆனால் தொடர்ந்து ஆலோசிக்கப்படும்.

* 232 **வினு—திரு.ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, சிவந்திபுரம் ஊராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வு வேலை செய்வதற்கான தொகை கட்டப்பட்டுவிட்டதா ?

(இ) ஆம் எனில், மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.**

(இ) ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு இவ்வூராட்சிக்கு குடிநீர் திட்டம் அமைப்பதற்கான வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்திற்கான நிர்மாணச் செலவு ரூ. 11.43 இலட்சம் எனவும் ஆண்டுதோறும் பராமரிப்புச் செலவு ரூ. 16,500 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டச் செலவினங்களை கடனுகப் பெற்று நிறைவேற்றவும் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்து நிறைவேற்றவும் தேவைப்படும் தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் 28—4—1975-ல் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறுர்.

1975 நவம்பர் 7]

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது செயல்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இதற்கு ஊராட்சி மன்றத்திலே கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான முறைப்படி பதில் கிடைத்த பின்னர், நிதியை ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்க வேண்டும். அதற்குப்பின் வேலை தொடங்கப்படும். இதுகுறித்து மேலும் ஏதேனும் பரிசிலனை தேவைப்படுமானால் செய்துதான் அந்தக் கடமையை மேற்கொள்ளுவார்கள்.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவர் அவர்களே, சிவந்திபுரம் பஞ்சாயத்து குடிநீர் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுமாதிரி இன்னும் பல பஞ்சாயத்துக்களில் (இன்வெஸ்டிகேஷன்) ஆய்வு வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பணம் கட்டப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் எல்லாம் தயார் பண்ணும்போது, அதிகமான எஸ்டிமேட் வருவதன் காரணமாக அவர்கள் கடைசியில் அந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் பரிசிலனை செய்து, சிறிய பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் ஆய்வுவேலைக்குரிய செலவை அரசே ஏற்றுக்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஓரளவுக்கு பெரிய திட்டமாக இருந்தால்தான் ஆய்வு வேலை மேற்கொள்ளப்படுகிறது. பெரிய திட்டமாக இல்லாமல், அந்த இடத்திலேயே தண்ணீர் கிடைப்பதாயிருந்தால், அத்தகைய சிறிய திட்டங்களைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்காது. மிகச் சிறிய தொகைதான் செலவாகும் என்றால், அதைத் தள்ளுபடி செய்வதோ, அல்லது அதைப் பெற்றுக் கொள்ளாமலேயே அந்தக் கடமையைச் செய்வதைக் கூட—எப்படி வறட்சி நேரத்தில் பணி நடைபெற்றதோ அதுபோல்—செய்யலாம். ஆனால், பல இலட்சம் ரூபாய் முதலீடு செய்யவேண்டிய காரணத்தால் சரியான வரைவுத் திட்டமிடும்போது, அந்த வரைவுத் திட்டச் செலவை

எந்த அளவுக்குக் குறைத்து பேரூராட்சியிடமிருந்தும், ஊராட்சி மன்றத்திடமிருந்தும் வசூலிக்க முடியுமோ அந்த அளவுக்குத் தான் வசூலிக்கிறார்கள்.

### விவேகானந்தபுரத்தில் படகுத்துறை

* 233 வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவுக் குழுவினரிடமிருந்து விவேகானந்தபுரத்தில் அவர்களுக்குச் சொந்தமாக ஒரு போட் ஜெட்டி (Boat Jetty) கட்டுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு மனு ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, கன்னியா குமரியில் விவேகானந்தபுரத்திற்கு அருகில் ஒரு போட் ஜெட்டி கட்டுவதற்கு விவேகானந்தர் நினைவுக் குழுவினர் முன்வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, விவேகானந்தர் நினைவாலயத்திற்குப் போவதற்கு போட் ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அதில் செல்வதற்கு ஏதாவது கட்டணம் வசூலிக்கப் படுகிறதா? இந்தமாதிரி போட் வசதிகளை மேலும் அதிகப் படுத்தித் தருவதற்கு ஏற்பாடு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.